பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 25 வியாழக்கிழமை (09-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 44

# நியாயமான தீர்வினை முன் வையுங்கள்; புலிகளை பேச்சுக்கு அழைத்து வருகிறோம்

## அரசுக்கும் எதிரணிக்கும் இ. தொ. காங்கிரஸ் அழைப்பு

கொழும்பு, ஜனவரி 9

அரசாங்கமும், எதிர்க்கட்சியும் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு யோசனை ஒன்றைக் கூட்டாக முன் வைக்க வேண்டும். அவ்வாறு செய்யின், விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வரும் பொறுப்பை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளும்.

— இவ்வாறு அறிவித்திருக்கிறார் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயலாளரும், கைத்தொழில், போக்குவரத்து துணை அமைச்சருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி.

அரசும், எதிர்க்கட்சிகளும் கூட்டாக முன்வைக்க உகந்த நியாயமான யோசனைத் திட்டத்திற்கு திரு. தொண்டமானின் யோசனைகள் சிறந்த அடித்தளமாக இருக்கமுடியும் — என்றும் திரு. செல்லச்சாமி தெரிவித்தார்.

அரசு சார்பு ''டெய்லி நியூஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் திரு. செல்லச்சாமி மேலும் தெரிவித்திருப்பதாவது:-

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மின்சார திருத்த வேலை மாங்குளம் வரை நடக்கிறது

### அமைச்சர் பண்டார தகவல்

கொழும்பு, ஜன. 9

வவுனியாவுக்கு வடக்கே மாங்குளம் வரை மின்சாரத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் திரு. சந்திரா பண்டார கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்தினரின் அனுமதியுடனும் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடனும் திருத்த வேலைகள் நடக்கின்றன என்றும் அமைச்சர் சொன்னார்.

தற்போது திருத்தப்பட்டு வரும் மின்சார இணைப்புகள் மீண்டும் சேதமாக்கப்பட்டால் பிரச்சினை முற்றாகத் தீரும் வரை எந்த ஒரு திருத்த வேலையையும் செய்யப்போவதில்லை என்றும் அவர் எச்சரித்தார்.

தீவுப்பகுதிக்கு இன்னும் இரண்டு மாதங்களில் மின்சாரம் விநியோகிக்கப்பட்டு விடும் என்றும்—

இதற்காக ஏழு ஜெனரேற்றர்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன என்றும் அமைச்சர் கூறினார். (இ-எ-த)

## ஈழ அகதிகள் திரும்புவது பிரதமர் ராவுக்கு மகிழ்ச்சி

புதுடில்லி, ஜன. 9

இம்மாதக் கடைசியில் தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பவிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளில் முதல் தொகுதியினரை திருகோணமலைத் துறைமுகத்தில் வைத்து வரவேற்க கொழும்பு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவைச் சந்தித்தபோது அவரிடம் இத்தகவலை வெளியிட்டார்.

இது குறித்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்த திரு. ராவ் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டிய நடவடிக்கையை இரண்டு வாரங்களுக்குள் தொடங்க வேண்டிய அவசியம் குறித்தும் இலங்கை அமைச்சரிடம் அப்போது விளக்கினார்.

ராவ் - ஹேரத் சந்திப்பு சுமார் அரைமணி நேரம் நீடித்தது. [த-எ]

## நெடுந்தீவுக்கு உணவு செஞ்சிலுவையினர் மூலம்

யாழ்ப்பாணம், ஜன. 9

சமீபத்திய இராணுவ நடவடிக்கையால் தனிமையாக்கப்பட்டுள்ள நெடுந்தீவுக்கு அத்தியாவசிய பொருள்களை எடுத்துச் செல்லும் பொறுப்பை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஏற்றுள்ளது.

தீவுப்பகுதியில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து நெடுந்தீவுக்கான அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்ததும், அதனால் அங்குள்ள மக்கள் பட்டினி நிலையை எதிர்நோக்கியதும் தெரிந்தவையே.

இதனை அடுத்தே செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அத்தியாவசிய பொருள்கள் விநியோகத்தை தற்போது ஏற்றுள்ளது.

இதன் முதற் கட்டமாக 'மெரிதல்' கப்பல் மூலம் 300 மெற்றிக் தொன் உணவுப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மருத்துவ மாணவன் மரணம்; தற்கொலை எனத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ்ப்பாணம்—சிறாம்பியடி யாழ். வீதியில் நேற்று முன்தினம் மர்மமான முறையில் உயிரிழந்த யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவனின் மரணம் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மரண விசாரணை நடத்திய அதிகாரி திரு. எ. அன்ரனி இத்தீர்ப்பை வழங்கினார்.

யாழ். பல்கலைக் கழகத்தின் 4 ஆம் ஆண்டு மருத்துவப்பீட மாணவனான கந்தலிங்கம் சதீஸ்குமார் கழுத்தில் கயிறு கட்டப்பட்டு முறுக்கப்பட்ட நிலையில் வீட்டின் படுக்கை அறையில் உயிரிழந்து கிடக்கக் காணப்பட்டார் என்பது தெரிந்ததே.

இம்மரணம் தொடர்பான பிரேத பரிசோதனையை டாக்டர் எம். விமலகாந்தன் மேற்கொண்டார்.

கழுத்து நெரிபட்டு மூச்சுத் திணறல் ஏற்பட்டதாலும் அத

[4 ஆம் பக்கம் பார்க்க]

### வவுனியாவில் அதிரடி

## 2 காவலரண்கள் புலிகளால் அழிப்பு

வவுனியா மாவட்டம், ஒலுக்குளம் வீதியில் அமைந்துள்ள இரண்டு காவலரண்கள் மீது நேற்று முன்தினம் இரவு 11-20 மணி அளவில் விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட 5 நிமிட நேர அதிரடித் தாக்குதலில் அந்த இரு காவலரண்களும் முற்றாக அழிக்கப்பட்டன. மூன்று படையினர் கொல்லப்பட்டனர். நவீன ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

அந்த காவலரண்களில் கடமையில் இருந்த ஏனைய படையினர் காயங்களுடன் தப்பி பிரதான முகாமுக்கு ஓடினர்.

அதேவேளை — இவர்களுக்கு உதவியாக தொடராக இருந்த காவலரண்களில் இருந்து வெளியேறிய படையினர் மீதும் புலிகள் தாக்குதல் தொடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 9

ஒலுக்குளம் காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்பேது விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

- ★ ரி 56—1 ரகத் துப்பாக்கி —1
- ★ அதற்குரிய ரவைக் கூடு —8
- ★ 303 ரக துப்பாக்கி —1
- ★ அதற்குரிய ரவைக் கூடு —1
- ★ 7.62 நடுத்தர ரக ரவைகள்—1,250
- ★ 303 துப்பாக்கி ரவைகள் —75

(இ-3)

### முச்சந்தி முரளி



ஜப்பானைப் பார்த்து பிரமிச் சுப் போ[illegible]

### தெல்லிப்பளையில் மீட்பு நிதி திரட்ட ஏற்பாடு

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் தமது மீட்பு நிதியைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் அவர்கள் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் தமது மீட்புநிதியைச் செலுத்தலாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். [இ]

## இனப் பிரச்சினைத் தீர்வுக்கு பொது அமைதித் திட்டம்

### பௌத்த, கிறிஸ்தவ குருமார் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 9

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பொதுவான அமைதித் திட்டம் ஒன்றை தயாரித்து செயற்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

''உலக ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு ஆயம்'' என்ற அமைதி இயக்கக் குழு இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறது.

இந்தக் குழுவில் பௌத்த கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்த குருமார்களும் உலக ஒருமைப்பாட்டு இயக்க இலங்கைக்கிளைப் பிரதிநிதிகளும் இடம்பெறுகின்றனர் என்று இந்திய வானொலி தெரிவித்தது. (அ-எ)

## உங்களின் ஒருவனாகவே யாழ். வர விரும்புகிறேன்

### தொண்டா சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜன. 9

''நான் ஒரு தமிழன். அந்த வகையில் உங்களில் ஒருவனாகவே நான் யாழ்ப்பாணம் வர விரும்புகிறேன்.''

— இவ்வாறு அமைச்சர் தொண்டமான் கடந்த வாரம் தம்மைச் சந்தித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரமுகரிடம் கூறியதாக அறிய வருகிறது.

தம்மைப் பற்றியும், தமது உத்தேச யாழ். விஜயம் குறித்தும் அமைச்சர் தொண்டமான் பின்வருமாறு தெரிவித்ததாக அறியவருகிறது:—

ஜனாதிபதியின் கையாளாகவோ, அல்லது தூதுவராகவோ, அரசின் கொள்கையை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## குடாநாட்டைச் சூழ பெரும்படைகுவிப்பு

லண்டன், ஜன. 9

விடுதலைப் புலிகளின் பிரதான கோட்டையாக விளங்கும் யாழ். குடாநாடு மீது தாக்குதல் நடத்தும் நோக்குடன் ஸ்ரீலங்காப் படையினர் குடாநாட்டுக்கு உள்ளேயும் சுற்றுப்புறங்களிலும் பெரும் அளவில் குவிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த வருடம் வெளிநாட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட நவீன ஆயுதங்களும் இப்பகுதிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

பி. பி. ஸியின் தெற்கு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஜப்பான் வரவேற்பில் புஷ் மயங்கி விழுந்தார்!

டோக்கியோ, ஜன. 9

ஜப்பானுக்கு விஜயம் செய்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதி புஷ், அங்கு ஜப்பான் பிரதமர் அளித்த வரவேற்புபசாரத்தின்போது மயங்கி விழுந்தார்.

ஜப்பான் பிரதமர் வாசஸ்தலத்தில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

ஆனால் பின்னர் திரு. புஷ் நடந்து சென்று உத்தியோகபூர்வ வாகனத்தில் ஏறி, அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்றர்.

'புளு' வினால் புஷ் பீடிக்கப்பட்டிருந்தார் என்றும்—

இப்போது பூரண சுகமடைந்துவிட்டார் என்றும் பி.பி.ஸி. அறிவித்தது.

திரு. புஷ் தென்கிழக்கு ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளுக்கு மேற்கொண்ட 12 நாள் பயணத்தின் இறுதிக் கட்டமாகத் தற்போது ஜப்பானில் தங்கியுள்ளார்.

## திருமலை தாக்குதலில் 3 ஊர்காவலர் மரணம்!

திருகோணமலை மாவட்டம் மைலவெவ பகுதியில் கடந்த ஞாயிறன்று காலை 10-30மணியளவில் ஊர்காவல் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 3 ஊர்காவலர் உயிரிழந்தனர்.

அவர்களிடமிருந்து வேட்டைத்துப்பாக்கி ஒன்று, ரவைகள் ஐந்து, இரண்டு கத்திகள் ஆகியன கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மலிவு விற்பனை

அப்பியாசக் கொப்பிகளும், பாடசாலை உபகரணங்களும், அழகிய பொங்கல் வாழ்த்து மடல்களும், கலண்டர்களும் ஆகக் குறைந்த விலையில் விற்பனையாகின்றன. துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ், சுன்னாகம். [சி-1191]

### தேவை

சகல வகை மணிக்கூடுகளையும் திருத்துவதில் அனுபவமும், ஆற்றலும் மிக்க திருத்துனர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். ''அல்டி'' 269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1265]

தொழிலாளர், விற்பனை உதவியாளர் தேவை. 1992-01-14 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மேலதிக விவரங்களுக்கு: யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். [சி/1303]

### புத்தகம் கட்டுதல்

ஆய்வுக்கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1186)

### இடமாற்றம்

வேலணையில் சேவை செய்த நடன முருகன் வைத்திய நிலையம் இப்போது சத்திரச்சந்தி, கொட்டடி றோட்டில் இயங்குகிறது. டாக்டர் கந்தையா நவரத்தினம். (19140)

### வாரத்தாள் கலண்டர்

அஷ்டலக்ஷ்மி வாரத்தாள் கலண்டர் ரூபா 55/-. பொது அறிவுப்போட்டி பரிசு ரூபா 1000/-. விடைகள் கலண்டரில் உண்டு. விவரங்களை விற்பனையாளரிடம் பெறுங்கள். [4475]

### மேசை/வாங்கு

கல்வி நிலையத்திற்கு பாவிக்கக்கூடிய வாங்கு, மேசைகள் உடன் தேவைப்படுகின்றன. நியாயமான விலை தரப்படும். . . . A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [சி/1264]

### ஆய்வுக் கட்டுரை

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறை விதிகளுக்கு ஏற்ப கட்டிக் கொடுக்கப்படும். இ. சங்கர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி/1197]

### அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

### வேப்பெண்ணெய்

பயிர்களைத் தாக்கும் நோய்கள், பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும், கிருமி நாசினியாகவும், மருத்துவ தேவைகளுக்கும் வேப்பெண்ணெய் உதவுகிறது. சுத்தமான வேப்பெண்ணெய்க்கு 'மில்க்வைற்' லேபலைப் பார்த்து வாங்குங்கள். [சி/1308]

### தவறிவிட்டது

பரநிருபசிங்கம் மணிமேகலா ஆகிய எனது 705282200V இலக்கம் கொண்ட அடையாள அட்டையும் பரநிருபசிங்கம் பாக்கியலட்சுமியின் வெளியே செல்வதற்கான அனுமதி அட்டையும் 1-1-92 இல் [புதன்] தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திரு. பரநிருபசிங்கம் மூளாய் றோட், வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [19266]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் பிரச்சினைகளுக்கு உரிய பதில் கிடைக்கும் ஜாதகம், குறிப்பு, எண் சோதிடம், கைரேகை, விவாகப் பொருத்தம் அனைத்திற்கும் தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [19260]

### புதிய நாவல்

மீரா வெளியீடு ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' திக்கொன்றாய்ப் பறக்கும் சகோதரப் பறவைகளின் சோக ராகம். இறுதிப் பக்கத்திலே மாண்டச் சித்திரமொன்று மனதுக்குள் சிரிக்கிறது, இதயம் சிலிர்க்கிறது. மானம் உயிர்க்கிறது. [19270]

### வரலாறு

விற்பனையாகின்றது! சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வரலாறு-ஆண்டு 11, வரலாறு - ஆண்டு 6. புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது. ஆக்கியோன்: ந. தர்மபாலன் [சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்]. [19244]

# சேவைக்குப் பாராட்டு

எனது நான்கு வயது மகள் ஜனனி 'செப்ரிசேமியா' நோய்வாய்ப்பட்டு 15 - 09 - 1991இல் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 19 - 10 - 1991 வரை அங்கு சிகிச்சை பெற்றுக் குணமடைந்துள்ளார்.

நோயுற்ற எனது மகளைக் காப்பாற்றும் வகையில் நேரம் காலம், இரவு பகல் பாராது 35 நாட்களும் சிறந்த முறையில் சிகிச்சையளித்த டாக்டர்கள், தாதிகள் மற்றும் இரத்ததானம் செய்த பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கு எனது குடும்பத்தினர் அனைவரினதும் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமது சிறந்த சேவையால் மக்களை நேசிப்பவர்களை எமது சமுதாயம் போற்றப் பழக வேண்டும். அதன் மூலம் அவர்கள் மனத்திருப்தி கொண்டு மேலும் சமூகத்துக்கு உழைக்க உந்தப்படுவார்கள் என்ற நோக்கத்துடனேயே எனது பாராட்டுதல்களைப் பகிரங்கப்படுத்துகிறேன்.

இ. சந்திரன்,
றியோ கிறீம் ஹவுஸ்,
யாழ்ப்பாணம்.
(19267)

# யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கம்

இச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 11 - 01 - 1992 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகமளிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

அ.வி.அ.ஜெ. விஜயரட்ணம், [தலைவர்]
சி.மு. தியாகராசா, [செயலாளர்]

இல. 392, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(4494)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 6 — 5 — 1918
மறைவு: 10 — 12 — 1991

## வீரகத்தி வல்லிபுரம் சின்னத்துரை
[V. V. S.]

ஓடி மறைந்ததையா - உமை
பிரிந்து மாதமொன்று
வாடித் தவிக்கின்றோம்
வண்ணமுகம் காணாமல்.

துணைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

419, டச்சு வீதி,
சாவகச்சேரி.
[19131]

# 31 ஆம் நாள் நினைவலைகள்



தாய் மடியில்: 09 - 01 - 1954
வான் மதியில்: 10 - 12 - 1991

## செபதேயு விக்ரர் அருள்பிரகாசம்

உங்களின் நினைவுகளால் தானாக வழிந்து ஓடும் எங்களின் கண்ணீர் இங்கு ஆறாகப் பெருகி, நாளும் மண்ணிலே குளமாய்ப்பாயும் காட்சிக்கு எல்லையில்லை. கண்ணிலே உங்களையே பார்த்திடத் துடிப்போம். உண்மை! ''உங்களைப் பிரிந்து ஒரு கணங்கூட வாழேன்'' என்று எங்களை மகிழவைத்த தெய்வமே! இன்று உங்கள் உதயமோ எம்மோடில்லை, வேதனைப் பிழம்பேயானோம். இதயமோ வெடித்து நிலை அற்றோராய் ஆகிப்போனோம்.

10-12-1991 செவ்வாயன்று காலஞ்சென்ற திரு. செபதேயு விக்ரர் அருள்பிரகாசம் அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து, பற்பல வகைகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் ஆகியோருக்கு எமது உளம்பூத்த நன்றிகள்.

மனைவி, மக்கள், தாய்,
சகோதர, சகோதரிகள்.

43, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.
(19271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம்
வரையறுக்கப்பட்டது

## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தினால் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. அகநிலைக் கணக்காய்வாளர் - 05.8
2. கிளை முகாமையாளர் - 208.11
3. விற்பனையாளர் - 308.15

சங்கத் தொழிற் பரப்பில் வசிப்பவர்களுக்கும், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: **16-01-1992**

மேலதிக விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- பொது முகாமையாளர்.

291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 08-01-1992
[சி 1304]

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல்

31-01 1992 ஆம் திகதிக்கு முன்பாக 1992 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை முழுமையாக செலுத்துவோர்களுக்கு 10 வீதமும், 1992 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டிற்கு மட்டும் செலுத்துவோர்களுக்கு 5 வீதமும் வரிக்கழிவு வழங்குவதற்கு இச்சபை தீர்மானித்துள்ளது.

குறிப்பிடப்பட்ட திகதிக்குள் ஆதனவரிகளைச் செலுத்தத் தவறினால் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாந்துக் கட்டணம் மேலதிகமாக செலுத்தப்பட வேண்டும்.

எனவே, தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31-01-1992 ஆம் திகதி பகல் 12-00 மணிக்கு முன்பாக முழுமையாக இச்சபையின் காரியாலயத்தில் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று, சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா.
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. 06-01-1992.
(சி/1306)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 19 — 05 — 1933
மறைவு: 26 — 11 — 1991

## திருமதி
## கனகம்மா பொன்னுத்துரை

எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி அடையவும், விண்ணில் இருந்து எங்களை ஆசீர்வதிக்கவும் எல்லாம் வல்ல பெருங்குளத்து முத்துமாரியை என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவின் போதும், இறுதிக் கிரியைகளில் கலந்து ஆறுதல் அளித்தவர்கள் மற்றும் அந்தியேட்டி சபிண்டீகரண வைபவங்களில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்கள் ஏனைய பல வகையிலும் உதவிய நண்பர்கள், உறவினர்கள், அனைத்து பெருமக்களுக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகள் உரியது.

குடும்பத்தினர்,
வேலணை - 3.

168, கோவில் வீதி,
நல்லூர்.
(19280)

## உதயன்

# நப்பாசைக்கு எதுவுமில்லை!

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குக் காணப்படும் எந்தத் தீர்வும், வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டு, அந்தப் பிராந்தியத்துக்குச் சுயாட்சி வழங்குவதை அடிப்படையாகக் கொண்டே அமைய வேண்டும். இவ்வாறு இந்தியா ஸ்ரீலங்கா அரசை வற்புறுத்தி உள்ளது.

பிரதமர் நரசிம்மராவ் பதவியேற்ற பின்னர், ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து இந்தியா உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருக்கும் கருத்து - நிலைப்பாடு இது என்றே சொல்லலாம்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தமட்டில், அவர்களின் தாயகம் வடக்கு - கிழக்கு இணைந்த பிரதேசம். இந்தப் பிரதேசத்தில் தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கவும், தமது அலுவல்களைத் தாமே நிர்வகிக்கவும் தன்னாட்சி -சுயாட்சி- உரிமை வேண்டும் என்பதே அவர்களின் நீண்டகால நிலைப்பாடு

அதன் காரணமாக, ஸ்ரீலங்கா அரசிடம் இந்தியா இப்போது வற்புறுத்தி இருக்கும் விடயத்தை ஈழத்தமிழர்கள் சாதகமான ஒன்றாகக் கொள்வது இயல்பே.

ஆனால், தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக கூறிக்கொண்டு வந்த இந்தியா, எதையுமே சாதிக்க முடியாமல் தோல்வி கண்ட பின்னர் அதன் கருத்துச் சக்தி மிக்கதாக இருக்குமா?

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அவசரப்பட்டுக் கைச்சாத்திட்டு, ஸ்ரீலங்கா அரசிடம் இந்தியா பெரும் அரசியல் — ராஜிக — தோல்வியை அடைந்தது! சாணக்கியம் இல்லாத அணுகு முறையினால் ஜே. ஆரிடம் ராஜீவ் பெரும் தோல்வி கண்டு போனார்!

வடக்கு-கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்குவதில் அப்போது இந்தியாவுக்கு அக்கறை இருக்கவில்லை. அல்லது அதனைச் சொல்லிச் செய்விப்பதற்கு அதற்கு தைரியம் இருக்கவில்லை?

தற்காலிகமாக இணைந்த மாகாணசபைக்குத் தானும் இந்தியாவில் உள்ள மாநிலங்களைப் போன்ற சட்டவாக்க அதிகாரங்களையோ அல்லது நிறைவேற்று அதிகாரங்களையோ பெற்றுக்கொடுக்க இந்தியாவினால் முடியவில்லை!

ஸ்ரீலங்கா இயற்றிய அரசமைப்புக்கான பதின்மூன்றாவது சட்டத்திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபை அதிகாரப் பட்டினியுடனேயே பிறப்பெடுத்தது! அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மிகச் சொற்பம். கொழும்பு அரசிடம் இருக்கும் அதிகாரங்களே மிகக் கூடுதலானவை. மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், சேவைகளை ஒருபுறம் ஒதுக்கித் தள்ளிவிட்டு சட்டங்களை இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்குவழங்கப்பட்டது! அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி கொழும்பு நாடாளுமன்றம் அண்மையில் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தை நிறைவேற்றி இருந்தது!

தான் வாங்கித் தந்த மாகாண சபை வெறும் "செத்தல்" முருக்கம் தடி என்பது இந்தியாவுக்கு அப்போது தெரியவில்லை. ஸ்ரீலங்காவுக்கு உள்ளே வந்து, அருகில் இருந்தபோது தான் செய்திருக்க வேண்டிய பணியை அப்போது சுயநலம் கருதி மறந்து போயிற்று இந்தியா!

இப்போது தூர இருந்து அதனை செய்விக்கப் போவதாகக் காட்ட முயல்வதில் பெரும் சூக்குமங்கள் இருக்கவே செய்யும். எனவே தமிழ் மக்கள் இந்தியாவின் இப்போதைய நிலைப்பாட்டைக் கண்டு நப்பாசை கொள்ள எதுவுமில்லை!

# வேணுவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன. 9

மன்னாரில் வெடி விபத்தில் வீரச்சாவை தழுவிக்கொண்ட மன்னார் மாவட்டத் தளபதி லெப். கேர்ணல் வேணு உட்பட நான்கு போராளிகளுக்கும் ஆயிரக் கணக்கான மக்கள் மன்னார் ஆட்காட்டிவெளியில் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

லெப். கேர்ணல் வேணு, மேஜர் சுகன், மேஜர் சயந்தன், கப்டன் குட்டிமணி ஆகியோரின் புகழுடல்கள் நேற்று அலங்கார ஊர்தியில் வட்டக் கண்டல், ஆலங்குளம், கருக்கண்டல், வண்ணாகுளம் ஆகிய பகுதிகள் ஊடாக ஆட்காட்டி வெளி மாவீரர் கல்லைறக்கு எடுத்துவரப்பட்டன.

ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகள் முன்பாக தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இரங்கற் கூட்டத்தை அடுத்து ஆட்காட்டி வெளி மாவீரர் கல்லறையில் மாவீரர்களின் புகழுடல்கள் புனித அடக்கம் செய்யப்பட்டன.

இதேவேளை —

மன்னார்த் தளபதி லெப். கேர்ணல் வேணுவுக்கும் ஏனைய மூன்று போராளிகளுக்கும் குடாநாடெங்கும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

குடாநாட்டின் பலபகுதிகளிலும் வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. [இ-3-5]

# ஹெலி சுட்டுவீழ்த்தப் பட்டது

யூகோஸ்லேவியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பான கண்காணிப்பு வேலைகளில் ஈடுபட்ட ஐரோப்பிய சமூக நாடுகளைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் சமஷ்டி அரசுப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்கள் பயணம் செய்த ஹெலிக்கொப்டர் ஒன்றை சமஷ்டி அரசுப் படைகள் சுட்டு வீழ்த்தின. அப்போதே அவர்கள் ஐவரும் உயிரிழந்தனர்.

அதனைத் தொடர்ந்து சமஷ்டி படைத் தளபதி இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

# நெடுந்தீவு சென்ற செஞ். குழு வருகிறது

யாழ்ப்பாணம், ஜன. 9

தீவுப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் இன்று யாழ். நகர் திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை புறப்பட்டுச் சென்ற இவர்கள் நெடுந்தீவுக்கு மட்டுமே விஜயம் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் நெடுந்தீவுக்கு மருந்து வகைகளையும் அங்குள்ளவர்களுக்கான தபால்களையும் எடுத்துச் சென்றனர்.

செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் ஏனைய தீவுகளுக்கு விஜயம் செய்யாத போதிலும், அங்கு சிக்குண்ட மக்களுக்கு இங்கிருக்கும் உறவினர்கள் கொடுத்தனுப்பிய கடிதங்களை ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. [இ-5-3]

# 13,500 மன்னார் அகதிகள் தாயகம் திரும்புவர்

சென்னை, ஜன. 9

தமிழகத்திலிருந்து திரும்பவிருக்கும் ஈழத் தமிழ் அகதிகளின் முதல் தொகுதியினரில் 13 ஆயிரத்து 500 பேர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்; 3 ஆயிரத்து 300 பேர் திருகோணமலை மாவட்டத்தையும், 6 ஆயிரத்து 300 பேர் வவுனியா மாவட்டத்தையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இத்தகவலை வெளியிட்டார்.

புதுடில்லியிலிருந்து கொழும்பு திரும்பும் வழியில் சென்னை காமராஜர் உள்நாட்டு விமான நிலையத்தில் சிலமணி நேரம் அவர் தங்கியிருந்தார். அப்போது செய்தியாளர்களிடம் இத்தகவலை அவர் வெளியிட்டார். [உ-எ]

# பட்டதாரி பயிலுநருக்கு கொழும்பில் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ். மாவட்ட அரச திணைக்களங்களில் பயிற்சி பெற்று வரும் பட்டதாரிப் பயிலுநர்கள் ஒரு மாதகால பயிற்சிக்கென எதிர் வரும் சனிக்கிழமை கொழும்பு செல்கின்றனர்.

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற பட்டதாரிப் பயிலுனர்களின் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்டது. (இ-5)

# கர்நாடகத்திலிருந்து 1லட்சம் தமிழ் அகதிகள்

சென்னை, ஜன. 9

கர்நாடகத்தில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து இதுவரை ஒரு லட்சத்து 914 தமிழர்கள் அகதிகளாக தமிழ் நாடு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த அகதிகளுக்கு உதவுவதற்காக தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா நிதி ஒன்றை [illegible] லட்சத்து 8 [illegible] அன்பளிப்பாக வழங்கினார். (உ-இ)

# தற்போதுள்ள சூழ்நிலை புயலுக்கு முன்னுள்ள அமைதி

கொழும்பு, ஜன. 9

''தற்போதுள்ள சூழ்நிலை புயலுக்கு முன் உள்ள அமைதியைப் போன்றது.''

—ஸ்ரீலங்கா இராணுவத் தரப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

புத்தாண்டுக்குப் பின்னர் அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே அவ்வளவு பெரிய சண்டை ஏதும் நடைபெறவில்லை என்று அவதானிகள் கூறியதாக ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

சமாதானபேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் நடந்து கொண்டிருப்பதால் இரு தரப்புகளும் பெரிய தாக்குதலில் இறங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் — ''புயலுக்கு முன் உள்ள அமைதியே தற்போது உள்ள அமைதி. இம் மாத இறுதியில் மிகவும் உற்சாகமான நடவடிக்கையை எதிர்பார்க்கலாம்'' — என்று இராணுவத் தரப்பு கூறியிருக்கிறது.

சமாதானத் திட்டத்திற்கும் தமது இராணுவ நடவடிக்கைக்கும் தொடர்பு இல்லை என்றும் —

இராணுவம் தற்போது வெற்றிப் பாதையில் உள்ளது என்றும் ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கா கூறியிருக்கிறார்.

# அதிபர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 9

தற்போது பாடசாலை அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து, கோட்ட ரீதியாக அதிபர்கள் கருத்தரங்கு நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது

கருத்தரங்கு நடைபெறும் பிரிவு, இடம், நேரம் வருமாறு:-

**நாளை**

★ பண்டத்தரிப்பு:- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி — காலை 9 மணி.

★ மருதனார்மடம்:- இராமநாதன் கல்லூரி — பி. ப 1 மணி.

**நாளை மறுதினம்**

★ யாழ்ப்பாணம்:- யாழ். இந்து குமாரசுவாமி மண்டபம் — காலை 9 மணி.

★ வேலணை:- வைத்தீஸ்வரா வித்தியாலயம் — பி. ப. 2 மணி.

**13 ஆம் திகதி**

★ வடமராட்சி:- பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் கல்லூரி — காலை 10 மணி.

★ தென்மராட்சி:- சாவகச்சேரி மகளிர் ம. வி. — பி. ப. 2-30 மணி. [உ]

# குடாநாட்டைச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிய ஒலிபரப்புச் சேவையில் பி. பி. ஸி செய்தியாளர் கிறிஸ் மொறிஸ் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நடைபெற்று வரும் யுத்தத்தினால் நாட்டில் உள்ள சகல சமூகத்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் குறிப்பாக சண்டை நடைபெற்று வரும் பகுதிகளில் வாழும் குடிமக்கள் பெரும் இழப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் அமைச்சர் தொண்டமான் தெரிவித்த யோசனைகளுக்கு பௌத்த குருமாரிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பி உள்ளது. அதே சமயம் அரசும் சகல கட்சிகளினதும் தீர்வு ஒன்றையே விரும்புகிறது. இவை ஒருபுறம் இருக்க இராணுவம் பெரும் அளவில் குடாநாட்டுப் பகுதியில் படைகளைக் குவித்து வருகிறது.

இப்படி பி. பி. ஸி. செய்தியாளர் மேலும் தெரிவித்தார். [இ]

# உங்களின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிலைநாட்ட முயலும் அமைச்சராகவோ நான் சமாதான முயற்சியில் இறங்கவில்லை.

நான் ஒரு தமிழன். இனத்துக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நோக்குடன் இந்த முயற்சியில் இறங்கியுள்ளேன். நான் உங்களில் ஒருவனாகவே யாழ்ப்பாணம் வர விரும்புகிறேன்.

தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் என்னை நம்பவேண்டும். தங்களில் ஒருவனாக என்னை ஏற்கவேண்டும்.

சமாதான நிலை ஏற்படக் கூடிய சூழ்நிலை தென் இலங்கையில் உருவாகி வருகிறது. இந்த நிலையில் விடுதலைப் புலிகளும் அதற்கு ஏற்ற வகையில் இசைவாக நடந்தால் சமாதான நிலை ஏற்படுவதில் சிரமம் இருக்காது — என்று கூறினாராம். [அ-3]

# நியாயமான தீர்வினை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு வெள்ளிக்கிழமை (நாளை) கூடுகிறது அனைத்துக்கட்சி மாநாடு இம்மாதம் 21 ஆம் திகதி கூடவிருக்கிறது. சமாதான யோசனைத் திட்டம் ஒன்றை தயாரிக்க இக் கூட்டங்களை நாம் பயன்படுத்த முடியும்.

வெள்ளிக்கிழமை கூடும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அன்றைய தினம் தொண்டமான் யோசனைகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றேன்.

அரச நிர்வாகத்தில் மக்கள் பங்கேற்கவேண்டும் என்ற — ஏற்றுக் கொள்ளப்பட்ட நோக்கத்தை — உண்மையானதாக்க அந்த யோசனைகள் உதவும்.

**நழுவவிடக் கூடாது**

நாடாளுமன்றத் தெரிவுக் குழு எடுக்கும் எந்த உடன்பாட்டையும் அனைத்து அரசியல் கட்சிகள் மாநாடு அங்கீகரிக்க முடியும். சமாதான யோசனைத் திட்டத்தை உருவாக்குவதில் நாடாளுமன்றத்தில் இடம்பெறாத அரசியல் கட்சிகளும் அமைப்புக்களும் சம்பந்தப்பட அது உதவும். நாம் விரைந்து ஒரு தீர்வைக் காணவேண்டும்.

எமக்கு தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த வாய்ப்பை நழுவ விடுவோமானால் இன்னொரு வாய்ப்பு எமக்கு கிடைக்காது போகலாம்.

**கண்டனம்**

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க வேண்டும். — என்ற கருத்தை நான் கண்டிக்கின்றேன்.

தோற்கடிக்கப்பட்ட மக்கள் தம் மீது திணிக்கப்பட்ட தீர்வை ஏற்றதாக, சரித்திரத்தில் எங்கேயாவது கூறப்பட்டது கிடையாது. அவர்கள் மீண்டும் கிளர்ந்தெழ சந்தர்ப்பம் வரும் வரை காத்து இருப்பார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தமது ஈழம் கோரிக்கையைக் கைவிட்டு தீர்வு ஒன்றை ஏற்றுக்கொள்ளும் மனோ நிலையில் உள்ளது. ஆனால் அந்தத்தீர்வு நியாயமானதாக — முழு அளவு சுயாட்சி அமைப்பாக இருக்கவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் தங்கள் தீர்வுகளை மக்கள் முன் வைக்கவேண்டும். அப்படி இக் கட்சிகள் செய்யத் தவறுமேயானால் -

சிங்கள தேசபக்தவாதம் என்ற போர்வையில் அவமரியாதைக்குள்ளாக்கப்பட்டவையும், விரக்திக்குள்ளாகியிருப்பவையுமான சக்திகள் மீண்டும் தலையெடுப்பதற்கு அது இடமளிப்பதாகிவிடும் — என்று கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

**மருத்துவபீட நான்காம் ஆண்டு (9ஆம் அணி) மாணவன்**

**அமரர் க. சதீஸ்குமார்**



தோற்றம்: **18-11-1966**
மறைவு: **07-01-1992**

மாலை முகத்துக்கு
ஏனிந்தக் கொதிப்பு?
மங்கும் ஆதவன்
மறந்தானா உதிக்க...
இங்கே ..
காலை விடியலுக்குள்
கனத்து நிற்கும்
நெஞ்சங்கள்.

**உன் நண்பர்கள்**
நான்காம் ஆண்டு
(9ஆம் அணி)
யாழ். மருத்துவபீடம்.

[19282]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## பரஞ்சோதி மகேஸ்வரி

கரணவாய் தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த திருமதி பரஞ்சோதி மகேஸ்வரி அவர்கள் 8-1-92 இல் காலமாகி விட்டார். இவர் க. பரஞ்சோதி அவர்களின் அன்பு மனைவியும், புவனேந்திரன் (முன்னாள் அஞ்சலக ஊழியர், கரவெட்டி), புஸ்பராணி (அவுஸ்திரேலியா), சுபேந்திரன் (கனடா), மகேந்திரன் (கனடா), யோகலிங்கம் (விவசாய இரசாயன ஆராய்ச்சியாளர், பொலநறுவை), ஜெயக்குமார் (விவசாய பீடம், மட்டக்களப்பு, பல்கலைக் கழகம்), ஆகியோரின் அருமைத் தாயாரும், கனகரத்தினம் [அவுஸ்திரேலியா, முன்னாள் சிறுகைத்தொழில் திணைக்கள மேற்பார்வையாளர் கச்சேரி, யாழ்ப்பாணம்], றஞ்சிதகுமாரி, புஷ்பராணி [கனடா], மங்களேஸ்வரி [கனடா], வாசுகி[ சங்கீத ஆசிரியை, கொழும்பு], ஆகியோரின் அன்பு மாமியும், சுபாஜினி [அவுஸ்திரேலியா], முரளீதரன் [அவுஸ்திரேலியா;, நாக சுகந்தி, ஆரித்தயன், வேணுகாணன் [கனடா], பிரண்ணா [கனடா], சுஜீவன் [கனடா], நிரோஸ் கண்ணா, ரமேஸ் கண்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [09-01-1992] வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**க. பரஞ்சோதி.**
[கணவர்]

''புஷ்பா பவனம்''
கரணவாய் தெற்கு,
கரவெட்டி,

[19281]

## கந்தலிங்கம் சதீஸ்குமார்

[4ஆம் ஆண்டு மருத்துவபீட மாணவர்]

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது இல. 23, யாழ். வீதியில் வசித்தவரும், மருத்துவ பீட மாணவருமாகிய செல்வன் கந்தலிங்கம் சதீஸ்குமார் [24 வயது] 7-1-1992 இல் அகால மரணமானார்.

இவர் திரு. சிதம்பரப்பிள்ளை கந்தலிங்கம் - தையல்நாயகி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், சாந்தி, சாந்தகுமார் [கனடா], உதயகுமார் [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. கா. திருப்பதியின் [ஆசிரியர், முழங்காவில்] அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-1-1992 வியாழக்கிழமை [இன்று] நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3-00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்,

தகவல்:
**சி.கந்தலிங்கம்**
[தந்தை]

யாழ். வீதி,
யாழ்ப்பாணம். (19283)

## போர்க்கால கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ். செயலகத்தினதும் மற்றும் சில அரச திணைக்களங்களினதும் ஊழியர்கள் கலந்து கொள்ளும் போர்க்கால கருத்தரங்கு ஒன்று இன்று முற்பகல் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் கடந்த மாதம் நடைபெற்ற முதலுதவிப் பயிற்சியில் பங்குபற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும். [த]

## திரிசாரணர் பொதுக் கூட்டம்

யாழ். மாவட்ட திரிசாரணர்களுக்கான பொதுக் கூட்டம் ஒன்று, இன்று வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அரியாலை யாழ்/ ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் நடைபெறும். [த]

## வலி. வடக்கு பிரதேச செயலகம்

வலி. வடக்கு பிரதேச செயலகம், நாளை வெள்ளி காலை 10 மணிக்கு பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கத்தினால் திறந்து வைக்கப்பட உள்ளது.

## நெடுந்தீவுக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களும் 45 பரல் மண்ணெண்ணெய்யும் மற்றும் மருந்து வகைகளும் அங்கு எடுத்துச் செல்லப்பட்டு ப. நோ. கூ. சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

அடுத்து 'குமண' கப்பல் மூலமும் அங்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணம் வந்து அங்கு திரும்பிச் செல்ல முடியாது உறவினர் வீடுகளிலும், அகதி முகாம்களிலும் தங்கி உள்ள நூற்றுக்கும் மேற்பட்டவர்களை 'குமண' கப்பல் மூலம் அங்கு அனுப்பி வைக்கும் சாத்தியம் குறித்தும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவுப்பகுதியில் நெடுந்தீவு தவிர ஏனைய தீவுகளின் தேவைகளை தற்போது படையினரே கவனித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## மருத்துவ-

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னால் இருதயம் இயங்க மறுத்ததாலும் மரணம் சம்பவித்ததாக அவர் தமது பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மரண விசாரணைகளின் போது மரணமான சதீஸ்குமார் எழுதியதாகக் கருதப்படும் கடிதம் ஒன்று அவரது ''சேர்ட் பொக்கட்டிலிருந்து'' எடுக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டது.

பெற்றோருக்கு எழுதப்பட்ட அத்தக் கடிதத்தில் ''நான் தெரிந்தும் தெரியாமலும் விட்ட தவறுக்கு அனைவரிடமும் மன்னிப்புக் கோருகிறேன். என் மரணத்துக்கு எனக்கு மட்டும் விளங்கக் கூடிய காரணமே பொறுப்பு. நானே பொறுப்பு. இதனைக் கெட்ட கனவாக மறந்து விடுங்கள்'' — என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

மரணவிசாரணையின் போது இறந்தவரின் சக மாணவர் [illegible]

(உ-15)

# முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி பீடிகளைப் போல் ஒரு சில பேர்கள் **தரத்திலும் விலையிலும் குறைந்த போலி** ஆர். வி. ஜி பீடிகளை விற்பனை செய்வதாக எமக்கு அறியவந்துள்ளது. அசல் ஆர். வி. ஜி பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

**குறைந்த** விலையில் போலி ஆர். வி. ஜி பீடி விற்பனை செய்பவர்களை இனம் கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகிறோம். இது தொடர்பாக தகவல் தருபவர்களுக்கு **தகுந்த சன்மானம்** அளிக்கப்படும்.

**ஆர். வி.ஜி நிர்வாகம்.**
58, குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(19273)

# லிகிதர் தேவை (ஆண்)

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத்திற்கு பின்வரும் தகைமைகளுக்கமைய லிகிதர் தேவை

வயது:- 20 முதல் 35 வரை.
கல்வித்தகைமை:- க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் தமிழ், கணிதம் விசேட சித்தி.
விண்ணப்ப முடிவு திகதி:- **13 - 01 - 1992**

**செயலாளர்,**
கைத்தொழில் வர்த்தக சங்கம்,
சாவகச்சேரி.

[சி-1310]

# அறிவித்தல்

**நல்லூர் பிரதேச சபை**
**(நல்லூர், கொக்குவில் உப அலுவலகங்கள்)**

**வரியிறுப்பாளர்களுக்கு,**

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 141 ஆவது பிரிவின் கீழ் 1992 ஆம் ஆண்டிற்கான**

## ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1992 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை நல்லூர் பிரதேச சபையின் உப-அலுவலகங்களில் உரிய காலத்துக்கு முன்பதாக செலுத்தினால் கீழ்க் குறிப்பிட்டபடி விசேட கழிவு வழங்கப்படும். தவறுவோருக்கு கீழ்க் குறிப்பிட்டபடி தண்டம் விதிக்கப்படும்.

1. 1992 ஆம் ஆண்டின் 4 கந்தாயங்களுக்கும் 31-01-1992 ஆம் திகதிக்கு முன்னர் வரி செலுத்துபவர்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
2. 1992 ஆம் ஆண்டின் ஒவ்வொரு கந்தாயத்திற்கும் முதல் மாத முடிவிற்கு முன்னர் வரி செலுத்துபவர்களுக்கு 5% கழிவு வழங்கப்படும்.

மேற்குறித்த கால எல்லைக்குள் செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்களுக்கு கீழ்க் குறித்தபடி தண்டப் பணம் விதித்து வரியுடன் அறவிடப்படும்.

1. குடியிருப்பு ஆதனமாயின் 15% தண்டப்பணமாக அறவிடப்படும்.
2. ஏனைய ஆதனங்களுக்கு 20% தண்டப்பணமாக அறவிடப்படும்.

எனவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் ஆதனவரியைச் செலுத்தி, சபையின் அபிவிருத்திக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**ஆ. மகாலிங்கம்,**
விசேட ஆணையாளர்,
நல்லூர் பிரதேசசபை.

நல்லூர் பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
07 - 01 - 1992

[சி-1307]

# மரண அறிவித்தல்

## திருமதி
## பொன்னம்மா பூவையா

திருமதி பொன்னம்மா பூவையா காலமானார். அன்னார் காலஞ்சென்ற பூவையாவின் மனைவியும், மகேஸ்வரி, கமலாவதி, குணவதி [மாலைதீவு], இராஜகோபால் (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், நவரட்ணம் [இளைப்பாறிய தபால் அதிபர்], காலஞ்சென்ற பத்மநாதன், ஜெயலீலா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை காலை 10-00 மணிக்கு கந்தரோடை சங்கம்புல மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
**திருமதி கமலாவதி பத்மநாதன்.**

கந்தையா வாத்தியார் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

[19272]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 9 - 1 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org